செ.வெ.எண்: 46/ஜூலை நாள் : 21.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## சிறுபான்மையினர் பிரிவினைச் சார்ந்த பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கை மற்றும் குறைகளை கேட்டறிந்து, பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகளை

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (21.07.2017) நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள், மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் பிரிவினைச் சார்ந்த பொதுமக்களைச் சந்தித்து அவர்தம் கோரிக்கை மற்றும் குறைகளை கேட்டறிந்து, தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு, சிறுபான்மையினர் மக்களின் நலனை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு,அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி / ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையினர் மாணவ மாணவியர்களுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் திரட்டும் நன்கொடை தொகைக்கு இணையாக அரசு இணை மானியம் இரண்டு மடங்கு (அதிகபட்சமாக ரூ.20 இலட்சம்) வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் ஜெருசலம் புனித பயணம் மேற்கொள்ளும் கிறித்தவர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.20,000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் தனிநபர் கடன் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கான சிறுகடன் திட்டம், கல்விக்கடன் உள்ளிட்ட கடன் திட்டங்களின் கீழ் கடனுதவிகள் வழங்கப்பட்டு பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

எனவே இத்துறையின் மூலம் வழங்கப்படும் நலத்திட்டங்களை சிறுபான்மையின மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் சிறுபான்மையிருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் யாவரும் முழுபாங்குடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். மேலும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் நலத்திட்டங்கள் சிறுபான்மையினர் மக்களுக்கு உரிய முறையில் சென்றடைந்திட ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்களுடன் சிறுபான்மையிருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகள் குறைகள் மற்றும் கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர். மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அதன்பின்பு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக 12 பயனாளிகளுக்கு தலா ரூ.5000 வீதம் மொத்தம் ரூ.60000/- மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளையும், 3 பயனாளிகளுக்கு தலா ரூ.10000/-வீதம் மொத்தம் ரூ.30000/- மதிப்பில் திருமண உதவித் தொகைக்கான காசோலைகளையும், 6 பயனாளிகளுக்கு தலா ரூ.5000 வீதம் மொத்தம் ரூ.30000/- மதிப்பில் சிறுதொழில் உதவித்தொகைக்கான காசோலைகளையும், 8 பயனாளிகளுக்கு தலா ரூ.10000 வீதம் மொத்தம் ரூ.80000/- மதிப்பில் மருத்துவ உதவித்தொகைக்கான காசோலைகளையும், 6 பயனாளிகளுக்கு தலா ரூ.5000 வீதம் மொத்தம் ரூ.30000/- மதிப்பில் முதியோர் மற்றும் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளையும், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.7500/- வீதம் மொத்தம் ரூ.37500/- மதிப்பிலான தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 40 பயனாளிகளுக்கு ரூ.2,67,500/- மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பிஷப்.டாக்டர்.எம்.பிரகாஷ் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நல ஆணைய உறுப்பினர்கள் திரு.ஜஸ்டின் செல்வராஜ், பேராசிரியர் திரு.ஏ.எம்.ஜேம்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.வ.முருகானந்தம் உள்பட சிறுபான்மையிருக்கான கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**